விலை: 30.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 047 வள்ளுவர் ஆண்டு 2053 தை 22 வெள்ளிக்கிழமை (04.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

# யாழ்.மாவட்ட செயலகம், ஏ9 வீதியை முடக்கி மீனவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



## அமைச்சர் டக்ளஸின் சமரச முயற்சியும் தோல்வி

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்தும் வடமராட்சிக் கடற்பரப்பில் உயிரிழந்த இரண்டு மீனவர்களுக்கு நீதி கோரியும் ஏ9 வீதி மற்றும் யாழ்.மாவட்டச் செயலகத்தை முடக்கி யாழ்.மாவட்ட மீனவர்கள் நேற்று வியா 15

## மீனவர்களின் போராட்டத்துக்கு
# நீதிமன்றம் தடை
## பெருமளவு பொலிஸ், படையினர் குவிப்பு



*(யாழ்ப்பாணம்)*

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் இடம்பெற்று வரும் வீதி மறியல் போராட்டத்துக்கு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை மாலை தடை உத்தரவை வழங்கியுள்ளது. *(15ஆம் பக்கம் பார்க்க)*

# மாதகலில் வீதி மறியல் போராட்டம்



(குப்பிழான்)

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும், வடமராட்சி கிழக்கைச் 15

## தொழில் செய்யமுடியாது
# படகு, வலைகளை எரித்த மீனவர்



(கரணவாய்)

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட மீனவர் ஒருவர் தொடர்ந்தும் கடற்றொழில் செய்ய 15

## கொரோனா
# 23 மரணம்
# 1,181 தொற்று

(கொழும்பு

கோவிட்-19 தொற்று காரணமாக நாட்டில் மேலும் 23 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. 15

# மீனவர்களின் போராட்டம் தொடர்கின்றது



(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற தடையுத்தரவை அடுத்து பருத்தித்துறை - சுப்பர் மடம் பகுதியில் பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் அகற்றப்பட்டபோதும் மீனவர்கள் போராட்டம் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில் குறித்த தடை உத்தரவு கட்டளை பருத்தித்துறை பொலிஸாரினால் போராட்டம் இடம் 02

## வடக்கு நிலைவரம் தொடர்பில்
# ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் பிரதமர் மகிந்த கலந்துரையாடல்



(கொழும்பு)

வடக்கின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேரில் சந்தித்து 15

## சுதந்திர தினத்தை முன்னிட்டு
# 197 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று 197 கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

[illegible] 15

# குருந்தூர்மலைக்கு தடையை மீறி செல்வோம்
## சுமந்திரன் எம்.பி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதை வெளிக்கொணரும்முகமாக தமிழ் மக்களின் வழிபாட்டு சுதந்திரம் மறுக்கப்பட்டிருக்கும் குருந்தூர்மலைக்கு தடையை மீறி செல்லவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆத்திரமடைந்த அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் வீதியை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்ளுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோபமடைந்து வெளியேறினார்.

இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்தால் கைது செய்வோம் என அமைச்சர் திரும்பத் திரும்ப வாக்குறுதியளித்தபோதும், போராட்டக்காரர்கள் சிலர் குதர்க்கமாக கேள்வியெழுப்பிய படியிருந்தனர்.

இந்திய படகுகளை தடை செய்வோம் என எழுத்து மூல உத்தரவாதமளிக்க வேண்டுமென்றும் மீறிவருபவர்களை பிடித்துவர எழுத்துமூல அனுமதியளிக்க வேண்டுமென்றும் கேட்டபடியிருந்தனர்.

இதனால் கோபமடைந்த அமைச்சர் அங்கிருந்து வெளியேறினார். (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 16 பரப்புக் காணி (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

(A9 வீதியிலிருந்து 150m தூரத்தில்)

(10022)

**077 288 0152, 077 911 6983**
**076 658 3621**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி 30 பரப்புக் காணி பத்துப் பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பின் விலை 320,000/=**

15 அடிப் பாதையுடன் அச்சுவேலியில் இருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கொம்பனிக்கு முன் வீதி.

[ அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 கி.மீ தூரம் ]

(10022)

**076 890 9259, 077 015 0353**


## குருந்தூர்...

ஊடக பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையிலே ஒரு வருடத்திற்கு முன்னர் நீண்டகாலமாக வழிபட்டு வந்த இடத்திலே எங்கள் மக்கள் வழிபடாமல் தடுக்கப்பட்டுள்ளனர். ஆகவே நாளைய தினம் (இன்று) எங்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றது. நாங்கள் சுதந்திரம் இல்லாத நாட்டிலே வாழ்கின்றோம் என்பதை பெப்ரவரி 04 ஆம் திகதியே உலகத்திற்கு எடுத்துக்காட்டுகின்ற ஒரு நடவடிக்கையாக குருந்தூர்மலைக்கு அதிகாலையிலே செல்லவிருக்கின்றோம்.

இது சம்பந்தமாக ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்றது. எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் இவர்கள் மூவரும் இதில் மனுதாரர்களாக இருக்கிறார்கள். நான் அந்த வழக்கிலே ஆஜராகின்றேன். அந்த வழக்கிலே பிரதிவாதியாக குறிக்கப்பட்டுள்ளவர்கள் நீதிமன்றத்திலே வந்து நாங்கள் அங்கே செல்வதற்கு தடையேதும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். ஆகையினாலே தடையேதும் இல்லையென்றால் நாங்கள் நாளை அங்கே செல்லவிருக்கின்றோம். செல்லுவதை யாராவது தடுத்தால் அதை அந்த நேரத்திலே நாங்கள் எதிர்கொள்வோம் என்றார். (ம-281)

# ஒமிக்ரோன் தொற்றால் பாதிப்பு அதிகரிக்கலாம்

## சுகாதார தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

ஒமிக்ரோன் தொற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தற்போது குறைவாகக் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் அந்த நிலைமை மாற்றமடையக் கூடும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்.

தொற்றாளர் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்தால் பாரிய அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும். எனவே ஆரம்ப கட்டத்திலேயே தொற்றாளர் எண்ணிக்கையை குறைந்த மட்டத்தில் பேணக்கூடியதாக இருந்தால் இவ்வாறான அபாயங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படாது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)


## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்கள் பெற்றுக் கொள்ளலாம்

பிளாஸ்டிக் பொருட்கள், சில்வர் வகைகள், பாட்டா வகைகள், தையல் உபகரணங்கள், நவீன வட்டில்கள், பொம்மை வகைகள், மார்க் வகைகள், சனிரேசர் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், கவறிங் நகைகள், அன்பளிப்புப் பொருட்கள் இவை அனைத்தும் கொழும்பு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(10022)

உரிமையாளர் தே. கலைத்தாசன் (கரன்)

**சரவணபவன் பான்சி கவுஸ்**

இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்

**077 468 3354**


## மீனவர்களின்...

பெறும் இடத்தில் வாசிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நீதிமன்றத்தின் உத்தரவுக்கு மதிப்பளித்து வீதியில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் மீனவர்களால் அகற்றப்பட்டுள்ளபோதும் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

போராட்டம் இடம்பெறும் இடத்தில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கலகத் தடுப்பு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-18.33.60)

# ஓர் ஆண்டு

## நினைவில் உன்னோடு நான்



மலர்வு 27.04.1954

அமரர்

உதிர்வு 04.02.2021

## திருமதி சந்திரா மகேந்திரன்

என் சுமையும் நீ தாங்கி ஏற்ற பல பணியோடு
நன்றிதனை மறவா நிமிர்ந்தவுன் சோதரரும்
மனதோடு பதிந்த மேன்மை
செய்கைளையும்
தினம் தாங்கி வருகிறேன்
தேனாகும் நினைவோடு...


(C-3704)

அண்ணா சிலையடி,
குமாரி ஒடை, காரணவாய்.

அ. மகேந்திரன் (கணவன்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 – 12 – 1943



மறைவு 03 – 02 – 2022

## திரு. வேலுப்பிள்ளை அம்பலவாணர்

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.48, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் விசுவமடுவில் வசித்தவருமான திரு. வேலுப்பிள்ளை அம்பலவாணர் (தருமம்) அவர்கள் நேற்று (03.02.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-அன்னம்மா தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா (வைத்தியர்) - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரி (முன்னாள் யாழ். மாநகர சபை எழுதுவினைஞர்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, இராசரத்தினம், அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி (மலர் - முன்னாள் தபாலதிபர், மண்டைதீவு) மற்றும் நாகலட்சுமி (பூ-கனடா, முன்னாள் தபாலதிபர், மண்டைதீவு), காலஞ்சென்றவர்களான குலசிங்கம் (செல்வம்), இரத்தினசிங்கம் (புண்ணியம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(10018)

இல. 48, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- இராசரத்தினம் அறிவரசன் (சிறிய மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் உண்மை நிலையை வெளிப்படுத்தி

# தீர்வு காண அரசு தயாரில்லை

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

**நாட்டில் கைவசம் இருக்கும் அந்நிய செலாவணி ஒரு மாத காலத்துக்கும் போதாது. அதனால் உணவு மாத்திரமல்லாது மருந்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருக்கின்றது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாடு பாரியதொரு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருப்பது அனைவரும் தெரிந்த விடயம். என்றாலும் இதற்கு முகம்கொடுத்து பிரச்சினைக்கு தீர்வு காண பல யோசனைகளை அரசாங்கத்துக்கு முன்வைத்திருக்கின்றோம்.

குறிப்பாக 1970 காலப் பகுதியில் இதனை விடவும் பாரியதொரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

என்றாலும் இதனை சமாளிக்க அன்றிருந்த நிதி அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தார். தனவந்தர்களிடமிருந்து பெறப்பட்ட வரியை 70 வீதம் அதிகரித்து அதன் மூலம் பெறப்பட்ட நிதியைக்கொண்டு பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்தார்.

அதேபோன்று அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தார். வசதி குறைந்த குடும்பத்தினருக்கு நிவாரண அட்டை வழங்கி, பட்டினியை போக்க நடவடிக்கை எடுத்தார். இவ்வாறானதொரு திட்டத்தை முன்னெடுக்குமாறு நாங்கள் அரசாங்கத்துக்கு திட்டங்களை சமர்ப்பித்தோம்.

ஆனால் நாடு எதிர்கொண்டுள்ள உண்மையான பிரச்சினையை வெளிப்படுத்தி அதற்கு தீர்வு காண அரசாங்கம் தயார் இல்லை.

அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சில அரசியல்வாதிகள் மற்றும் திறமையற்ற அதிகாரிகளின் செயற்பாடுகளே இந்த பிரச்சினை தீவிரமடைய காரணமாகும். உரப்பிச்சினைக்கும் இதுவே காரணம்.

இரசாயன உரத்தை உடனடியாக தடை செய்ததன் விளைவே விவசாயம் பாதிக்கப்பட்டு, வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது என தெரிவித்தார். (4)

## பதவி விலகினார் அருந்திக பெர்னாண்டோ



(கொழும்பு)

பதவியிலிருந்து விலகுவதாக இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ராகம மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் அவரது மகன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பான முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் வரை தான் பதவி விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

ராகம மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தனக்கும் தொடர்பு இருப்பது நிரூபிக்கப்பட்டால், தான் பதவியை இராஜினாமா செய்வேன் என இராஜாங்க அமைச்சர் முன்னதாக தெரிவித்திருந்தமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

## கள்ளச் சந்தை டொலர் விவகாரம்

# நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை அமெரிக்கா விசாரணை செய்ய வேண்டும்

## சுரேஷ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கள்ள சந்தையில் டொலர்கள் வாங்கி வடகொரியாவிடம் ஆயுத கொள்வனவு செய்த தமது நாட்டு பிரஜையான நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அமெரிக்கா விசாரணை செய்து உண்மையை தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.



யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கறுப்பு சந்தையில் டொலர்களை வாங்கி வடகொரியாவிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்ததாக இலங்கையின் நிதி அமைச்சரும் அமெரிக்க பிரஜையுமான பசில் ராஜபக்ஷ கூறியிருப்பது தற்போது சர்சையாகியுள்ளது .

தமிழ் மக்களின் விடுதலை போராட்டம் என்பது சுயநிர்ணய உரிமை, சுயாட்சி போன்றவற்றை மையமாகக் கொண்டு நடைபெற்றது. விடுதலைப் போராட்டம் என்பது பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய விடயம்.

ஆனால் 2005 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு இந்த அரசாங்கம் மூர்க்கத்தனமாக போராட்டத்தை முன்னெடுத்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயம். யுத்தத்தை முன்னெடுத்து செல்வதற்காக பல கோடிகளை செலவிட்டு ஆயுதங்களை கொள்வனவு செய்தது.

முக்கியமாக சீனாவிலிருந்தும் பாகிஸ்தானில் இருந்தும் தற்போது வடகொரியாவில் இருந்து ஆயுதங்களை வேண்டியதாக கூறுகின்றார்கள்.

வடகொரியாவில் இருந்து பல மில்லியன் டொலர்களுக்கு கடன்களாக இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்த இராணுவ தளபாடங்களின் கொள்வனவு மற்றும் கடன் என்பன தற்போது எங்கு கொண்டு வந்து விட்டுள்ளது என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இவ் விடயம் அன்றைய பாதுகாப்பு செயலாளராக இருந்தவரும் அமெரிக்க பிரஜையாக இருக்கின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தெரியும். அமெரிக்காவால் பொருளாதார தடை விதிக்கப்பட்ட நாட்டுடன் இவர்கள் கள்ளச் சந்தை மூலம் டொலர்களை கடத்தி அங்கிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தோம் என ஏற்றுக்கொள்கிறார். நிச்சயமாக அமெரிக்க அரசு பசில் ராஜபக்ஷவை மாத்திரமன்றி அன்றைய காலகட்டத்தில் இலங்கையை வழிநடத்திய தலைவர்களையும் விசாரிக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (4-33)

# தொற்று அதிகரித்தால்

## எதிர்பாராத வயது பிரிவினர் மரணிக்கும் அபாயம்

## மருத்துவர் ஹேமந்த ஹேரத்



(கொழும்பு)

தொற்றாளர்கள் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் போது எதிர்பாராத வகையில், எதிர்பாராத வயதுப் பிரிவினர் மரணிக்கக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே வைரஸ் பரவலுக்கு இடமளிக்காத வகையில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் தொற்று ஏற்பட்டு 14 நாட்கள் நிறைவடைந்ததன் பின்னரும் ஒரு நபரால் தொற்று பரவக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகிறதா? என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தொற்றாளர்கள் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் போது, எதிர்பாராத வகையில், எதிர்பாராத வயதுப் பிரிவினர் மரணிக்கக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

அதற்காக மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாமலிருப்பது பொருத்தமானதாக இருக்காது. இதற்கான ஒரே தீர்வு கொவிட் தொற்று பரவுவதைத் தவிர்ப்பது மாத்திரமேயாகும். தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பை சாதாரணமாகக் கருதக் கூடாது.

எதிர்வரும் காலங்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும். அவ்வாறான நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதோடு, தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மக்கள் ஒன்றுகூடல்களின் போது தொற்று விரைவாக பரவக் கூடிய வாய்ப்பும் அதிகமாகும். எனவே இதுபோன்ற விடயங்களை தவிர்த்து பாதுகாப்பாக செயற்பட வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும் என தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணம்- 2021

## சோதனைக்கு மத்தியிலும் சாதனை புரியும் துடுப்பாட்டப் போட்டி

கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்காக கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் துடுப்பாட்ட போட்டி (2021) கொவிட் தொற்று நோயால் இடை நிறுத்தப்பட்டது.

அத்தொடரை முடிப்பதற்காக போட்டிகள் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அப்போட்டிகளில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பற்றீசியன்ஸ் அணியும் , மூளாய் விக்டோறி அணியும் மோதவுள்ளன.

பற்றீசியன்ஸ் அணி 2 ஆவது சுற்றில் டிறைற்றேன் அணியை 44 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

மூளாய் விக்டோறி அணி, ஹாட்வியைற்ஸ் அணியை 1 விக்கெட்டால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். வெற்றி பெற்ற இரு அணிகளும் 3 ஆவது கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள்.

தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து மூளாய் விக்டோறியன்ஸ் அணி மோதவுள்ளன.

விக்டோறியன்ஸ் அணி விங்ஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். யாழ். ஜொனியன்ஸ் அணி அரியாலை சென்றல் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். வெற்றி பெற்ற இரு அணிகளும் 4 ஆவது கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள்.

3 வது கால் இறுதிப் போட்டியிலும், 4 ஆவது கால் இறுதிப் போட்டியிலும் வெற்றி பெறும் அணிகள் அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## உதைபந்தாட்ட அக்கடமிகளுக்கு இடையில் சுற்றுப் போட்டியை நடத்த வேண்டும்

### உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கம் கோரிக்கை

உதைபந்தாட்ட அக்கடமிகளுக்கு இடையில் சுற்றுப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் யுவராஜ் இடம் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.



இலங்கையில் பல வருடங்களுக்கு முன்னரே அக்கடமிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் யாழ். மாவட்டத்தில் இப்பொழுதே பல அக்கடமிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இதனை வளர்க்கும் முகமாகவும் அதில் பங்கு பற்ற செல்லும் வீரர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலும் எதிர்காலத்தில் இலங்கை அணியில் இடம் பிடிக்கும் வாய்ப்பு உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் போட்டிகள் அமைய வேண்டும்.

அந்த வகையில் வலிகாமத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் அக்கடமி, நொதேன் விளையாட்டு கல்லூரி அக்கடமி, வலிகாம உதைபந்தாட்ட அக்கடமி, இளவாலை அக்கடமி, சிறிமுருகன் அக்கடமி, திருக்குமரன் விளையாட்டு அக்கடமி என பல்கி பெருகியதுடன் அரியாலையில் பொதுவான உதைபந்தாட்ட அக்கடமியும் உள்ளது.


இதில் பங்குபெறும் வீரர்களுக்கு இலக்கு நோக்கிய பயணமாக அத்திபாரமிடுவது சுற்றுப் போட்டிகளே என மேலும் தெரிவித்துள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2502

பிருந்தாவன்




நந்தீஸ்




விமலேஸ்





ஜீவதாரணி




சிவகௌரி




மிதினா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயுதம் பெற்ற விடயத்தை பகிரங்கமாகக்கூற முடியாது

## பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் ஆயுதம் பெற்றதை தற்போது விபரித்தால் சர்வதேச மட்டத்தில் பாதிப்பு ஏற்படுத்தும். ஆகவே அவ்விடயம் குறித்து பேசாமல் இருப்பது இரு தரப்பிற்கும் சிறந்ததாக அமையும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யுத்த காலத்தில் கறுப்பு சந்தை ஊடாக ஆயுதம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் விடயத்தை பற்றி பேசவும், விபரிக்கவும் விரும்பவில்லை. ஏனெனில் அது சர்வதேச மட்டத்தில் சிக்கல் நிலைமையை ஏற்படுத்தும்.

அவ்விடயம் குறித்து பேசாமல் இருப்பது இரு தரப்பிற்கும் சிறந்ததாக அமையும். ஜெனிவா விவகாரம் காலம் காலமாகப் பேசப்படுகிறது. எமது ஆட்சியில் இறுதித் தீர்மானத்தை காண எதிர்பார்த்துள்ளோம்.



யுத்தம் நிறைவு பெற்ற காலத்தில் இருந்து ஜெனிவா விவகாரம் பேசப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிறந்த முறையில் இப்பிரச்சினை எதிர்கொள்ளப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஜெனிவா விவகாரம் கையாண்ட விதம் மாற்றியமைக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜெனிவா விவகாரத்திற்கு இறுதித் தீர்வை காண நாகரிகமான கொள்கையினை வகுத்துள்ளார்.

ஜெனிவா விவகாரத்திற்கு சுமுகமான இறுதித் தீர்வை நிச்சயம் காண்போம் எனத் தெரிவித்தார். (4)

# ரஞ்சன் விடுதலை-சஜித் நம்பிக்கை

(கொழும்பு)

சுதந்திர தினமான இன்று ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்படுவார் என்று தாம் உறுதியாக நம்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றுக் காலை வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மனிதாபிமானத்திற்கு முன்னுரிமை அளித்து மனிதாபிமானிகளின் பூரண சுதந்திரத்திற்காக அவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் மேலும் கூறினார். (4)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திரு.

### கார்த்தி கதிரவேலு

மலர்வு: 1926.04.12
உதிர்வு: 2017.01.31

கண் இமைக்கும்
நேரமெல்லாம்
கண்கள் கடலாகிறதே
கண் கலங்க விடாமல்
கண்மணிபோல காத்த
தெய்வமல்லோ
கனவிலும்
உங்கள் நினைவுகள்
கலையாது
உங்கள் உறவுகள்
கவலைகள் ஓயவில்லை
காணாத எங்கள்
குலவிளக்கை நினைத்து

இல.222 நாவலர் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(9859)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி.பரமேஸ்வரி விநாயகமூர்த்தி

மலர்வு 08.04.1950 — உதிர்வு 23.01.2022



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி. விஜயரதனி மதிராஜ்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி.பரமேஸ்வரி விநாயகமூர்த்தி
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்க்கு
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

c-3701)


# இராசிபலன்

04.02.2022
தை 22, வெள்ளிக்கிழமை
திருதியை முற்பகல் 8.24 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 7.48 மணிவரை
சுபநேரம் - 6.35- 8.05 மணிவரை
இராகுகாலம் -11.05-12.35 மணிவரை
சந்திராஷ்டமம்-பூரம்,ஆயிலியம்
சதுர்த்தி விரதம்

வளவன்




ஆரோக்கியத்தில் கவனம் தேவை, தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக்குறைவான நாள்.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.




நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வருமானம் திருப்தி தரும்.




கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.




உறவினர்களின் மனக் கஷ்டத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் பெருக வழியமைப்பீர்கள்.




ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களில் நட்பு கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

உன் மீது நம்பிக்கை வைப்பவர் நடுவில் அதிக நேரத்தைச் செலவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுப் பெறாத வீதிப் புனரமைப்பு மாற்று வழியில் அலையும் மக்கள்

(அராலி)

மயிலிட்டி - கட்டுவன் பிரதான வீதியை திறந்து வைக்குமாறு கோரி அப்பிரதேச மக்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்றை கையளித்தனர். அக் கடிதத்தில் உள்ளதாவது,

மயிலிட்டி - கட்டுவன் பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வந்த நிலையில் 400 மீற்றர் தூரம் வரை தற்போது புனரமைக்கப்படாது உள்ளது.

இவ்வீதி 400 மீற்றர் புனரமைக்கப்படாததால் மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றியே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நமது நிலையை கருத்தில் கொண்டு இதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. (5-6-104)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் 2022 ஆம் ஆண்டிற்கான முதலாவது பொலிஸ் அணிவகுப்பு நிகழ்வும் வாகன பரிசோதனை நிகழ்வும் நேற்று நிலைய பொறுப்பதிகாரி காஞ்சனா விமல வீரா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக காங்கேசன்துறை பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரஞ்சித் கொட்டாச்சி கலந்து கொண்டார். (படம்-மகாலிங்கம்)

# கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் கைது

(அராலி)

ஊர்காவற்றுறை - கரம்பன் பகுதியில் கர்ப்பவதி பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கிளிநொச்சியில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞானசேகரன் ஹம்சிகா என்ற 27 வயது கர்ப்பவதி கடந்த 2017ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆம் திகதி வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

குறித்த கொலை சம்பவத்தில் சந்தேகத்தின் பெயரில் உரும்பிராயை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான 36 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைதான நபர் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் படி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (5-6-104)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்றுமாலைகொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (6-5)



வரணி மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில் அதிபர் ப.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், முன்னாள் அதிபர் க.மங்களேஸ்வரன், தனங்கிளப்பு அ.த.க.பாடசாலை அதிபர் க.உமாபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-6)

# மோட்டார் சைக்கிளில் இலங்கையை சுற்றிவரும் இளைஞர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் கரையோரப் பாதைகள் ஊடாக இலங்கைத் தீவை சுற்றி 1380 கிலோ மீற்றர் தூரத்தை 35 தொடக்கம் 40 மணித்தியாலங்களுக்குள் மோட்டார் சைக்கிளில் கடக்க இமையவன் என்ற இளைஞன் திட்டமிட்டு நேற்று வியாழக்கிழமை காலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்தார்.

இலங்கையின் கரையோரப் பாதைகள் ஊடாக இலங்கைத் தீவின் அண்ணளவாக 1380 கிலோ மீற்றர் தூரத்தை 35 தொடக்கம் 40 மணித்தியாலங்களுக்குள் பயணம் செய்து மீண்டும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கத்தை இன்று வெள்ளிக்கிழமை வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-6-33)



அரச சார்பற்ற நிறுவனமான IOM இன் நிதி அனுசரணையில் OFERR(CEYLON) நிறுவனமும் இணைந்து இந்தியாவிலிருந்து 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த மக்களிற்கான வாழ்வாதார உதவிகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் கலந்து கொண்டு தொழில் உபகரணங்களைப் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார். (படம்- ரவிசாந்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இடம்பெற்று வரும் இறைஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு துன்னாலை குடவத்தை சிதம்பர விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் கலாநிதி சிவஸ்ரீ நா. கலாதரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம் பெறும். (5-6)



பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் முன்னெடுத்துள்ள வீதி மறியல் போராட்டக்களத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அவர்களுடன் கலந்துரையாடியதுடன் தனது ஆதரவையும் தெரிவித்தார். (படம்- சிவசாந்தன்)



வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் "ஒரு இலட்சம் பணிகள்" எனும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.அந்தவகையில் வடக்கு மாகாணத்திலும் இச் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(படங்கள்- சிவசாந்தன், சதீஸ், சுபேசன், சபதசங்கரி, தேவானந்தன், ஜோசப்நயன், ரவிசாந், வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யாத குற்றத்திற்காக எம்மை திட்டுகின்றனர்

## பசில் ஆதங்கம்

(கொழும்பு)

யாரோ பெற்றுக்கொண்ட கடனை திரும்ப செலுத்தும் தாம், அனைவரிடமும் திட்டு வாங்க நேரிட்டுள்ளது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நாடு சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்டது. கடன் பெற்றுக்கொள்ளும் போது திட்டு வாங்கிய நிதி அமைச்சர்களை பார்த்திருப்பீர்கள், நான் பெற்ற கடன்களை திரும்ப செலுத்துகின்றேன். அதற்கும் திட்டுகின்றனர்.

அண்மையில் 500 டொலர் கடன் செலுத்த நேரிட்டது. இது நாம் பெற்றுக்கொண்ட கடன் அல்ல. இந்த கடனை யார் பெற்றுக்கொண்டார்கள் என்பது எனக்கே தெரியாது? இதே விதமாக இந்த ஆண்டிலும் பெருந்தொகைக் கடன் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த ஆண்டில் மொத்தமாக 6.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் மற்றும் வட்டியாக செலுத்த வேண்டியுள்ளது.

இந்த அனைத்து கடன் தொகைகளையும் நாம் செலுத்துவோம், இதனை மிகவும் பொறுப்புடன் நான் கூறுகின்றேன். நான் எதிர்க்கட்சிகளுக்கு ஒன்றைக் கூற விரும்புகின்றேன். நாம் கடன் செலுத்தும் போது அது குறித்து மகிழ்ச்சி அடையுங்கள்.

இந்த தலைமுறையில் உங்களினால் ஆட்சி பீடம் ஏற முடியாது. எனினும் எப்போதாவது ஆட்சிக்கு வந்தால் கடன் இல்லாத நிலை உங்களுக்கு இருக்கும் என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (4)

# போதைப் பொருள் கடத்தல்

## 9 ஈரானியர்கள் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு ஈரானில் இருந்து கடல் வழியாக கப்பல் ஒன்றில் 200 கிலோ போதைப்பொருள் கடத்தி வந்த ஈரான் நாட்டைச் சேர்ந்த 9 பேரை கைது செய்து கொழும்பு கடற்படை தளத்திற்கு நேற்று அழைத்து வந்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா: 39 ¼ செவ் 7 சூரி 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: ஓட்டோ மொபைல் டெக்னீசியன்
எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு
தொ.இ: B/12242

பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 32½ செவ் 6 சூரி 1 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:BSc (Pera) Civil Engineer Sinagapore தேவையேற்படின் இலங்கைக்கு வந்து வேலை செய்வார்
எதிர்பார்ப்பு: Doctor, Accountant, Lecturer, IT, Bank, BA தவிர்ந்த பட்டதாரி
தொ.இ: B/12244

பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 64¾ செவ் 10 சூரி 8 இல்
தகைமை/தொழில்: டிப்ளோமா (தகவல் தொழில்நுட்பம்) (வியாபாரம் லண்டன்)
எதிர்பார்ப்பு: உள்நாடு சராசரி படிப்பு
தொ.இ: B/12245

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பூரம் 4
கி.பா: செவ் 6 சூரி 4 இல் உயரம்:5'3"
தகைமை/தொழில்: BSc Engineer
எதிர்பார்ப்பு:பட்டதாரியாக இருக்க வேண்டும் வேலை இல்லாவிட்டாலும் பரவாயில்லை
தொ.இ: B/12249

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 16¾ சூரி 10 செவ் 9 உயரம்: 160 cm
தகைமை/தொழில்:M.B.B.S Doctor
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/12350

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: மகம் 3
கி.பா: செவ் 3 சூரி 7 இல் உயரம்:5'8"
தகைமை/தொழில்:ICT,MSC விவாகரத்து பெற்றவர் 10 வயதில் பெண் குழந்தை உண்டு இருவரும் லண்டனில் வசிக்கிறார்கள் PR இல்லை
எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாட்டு மாப்பிள்ளை
தொ.இ:G/12351

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம் உயரம்: 5'2"
தகைமை/தொழில்:M.B.B.S Doctor
எதிர்பார்ப்பு:Doctor ,Engineer
தொ.இ:G/12355

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூராட்டாதி 4
கி.பா: செவ் 1 சூரி 5 இல் உயரம்:5'2"
தகைமை/தொழில்: BScஆராய்ச்சியாளர் (லண்டன்)
எதிர்பார்ப்பு: உள்நாடு உயர்பதவி அல்லது பட்டதாரி
தொ.இ: G/12362

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர் மாற்றம்

09/14, மூளாய் வீதி 4ம் ஒழுங்கை, வட்டாரம் - 11

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகம் எல்லைக் குட்பட்ட வட்டாரம் 11 மூளாய் வீதி 4 ம் ஒழுங்கை இல: 09/14 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை **கந்தையா கனகரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14942/15.09.1984ம் இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை காராளசிங்கம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**இலட்சுமணர் கோணேசவரதனும் பெண் தர்மகுணராணியும்** ஆகியவர்கள் குறித்த முழு ஆதனத்தில் மேற்குப்பக்கமாக நிந்தப்படுத்தப்பட்ட ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 799/03.01.1985ம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா கனகரத்தினம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை **சோமசுந்தரம் ஞானகரனும் பெண் கஜேந்தினியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2092/15.06.2020ம் இலக்க உறுதியால் குறித்த **இலட்சுமணர் கோணேசவரதனும் பெண் தர்மகுணராணியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **சோமசுந்தரம் ஞானகரனும் பெண் கஜேந்தினியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சோமசுந்தரம் ஞானகரனும் பெண் கஜேந்தினியும்** ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

(10014)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் தொடர்பானது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு சபையினது அலுவலக சட்டத்தரணியாக செயற்படுதல் மற்றும் சபைக்கு அவ்வப்போது தேவைப்படும் சட்ட ஆலோசனைகளினை எழுத்து மூலம் வழங்குவதன் பொருட்டு சபையினால் சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்:**

- யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அலுவலக வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சபையின் அலுவலக சட்ட விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.
- குறைந்தது 05 வருடங்கள் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஆலோசனை விடயத்தில் குறைந்தது 02 வருட முன் அனுபவம் முன்னுரிமையாக கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் இச் சேவையினை வழங்க விரும்பினால் அதற்கான படிவக்கட்டணம் 1000.00 இனை தலைமை அலுவலகத்தில் செலுத்தி அதற்கான விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி தேவைப்படும் ஆவணங்களின் நகல் பிரதியினை இணைப்பதுடன், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சகல சட்ட ஆலோசனை விடயங்களிற்கான கொடுப்பனவு விபரத்தினையும் இணைத்து 21.02.2022 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்பாகவோ கடித உறையின் இடதுபக்க மூலையில் **"சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்"** என குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு **021 205 8867** தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-3700)

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** **04.02.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தை ஏற்படுத்தும் டெலிவொர்க்கிங்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை


(ஜெனிவா)

**நவீன தொழில்நுட்ப வசதிகளின் துணையுடன் வேலை செய்வது ஆபத்து என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

கொரோனா வைரஸ் பெருந்தொற்று உலகமெங்கும் பணிச் சூழலையே மாற்றி விட்டது. வீட்டில் இருந்து கொண்டு இணையத்தளம், ஈமெயில், தொலைபேசி போன்ற நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி வேலை செய்வது 'டெலி வொர்க்கிங்' என அழைக்கப்படுகிறது.

டெலிவொர்க்கிங் பல நிறுவனங்களுக்கு அதிக உற்பத்தித்திறன் மற்றும் குறைந்த செயற்பாட்டு செலவுகளுக்கு வழிவகுக்கிறது. எவ்வாறாயினும் சரியான திட்டமிடல் அமைப்பு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இல்லாமையால் தொழிலாளர்களின் உடல், மன ஆரோக்கியம் மற்றும் சமூக நல்வாழ்வில் டெலிவொர்க்கிங் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

டெலிவொர்க்கிங் முறையில் பணி செய்வதால் முதுகுவலி, மனநல பாதிப்பு, சமூக தனிமை, நிலையான மன உளைச்சல், தனிமை, புகை பிடித்தல் மற்றும் மது அருந்துதல் அதிகரிப்பு போன்ற



பாதிப்பு கள் ஏற்படும் அபாயம் உள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. (4)

# மாமனாருக்கு மரண தண்டனை நிறைவேற்றிய கிம் ஜாங் உன்

## பல வருடங்களின் பின் வெளியான தகவல்



(பியாங்யாங்)

கணவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு 9 ஆண்டுகள் ஆன நிலையில் கிம் ஜாங் உன்னின் அத்தை இரண்டாண்டுகளுக்கு பின்னர் பொது வெளியில் முதல் முறையாக தோன்றியுள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனது மனைவி மற்றும் அத்தையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை சந்திரப் புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இதன்மூலம் கிம் ஜாங்கின் அத்தையான கிம் கியாங் ஹுய் இரண்டாண்டுகள் கழித்து பொது நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ளார்.

கிம் கியாங், கிம் ஜாங்கின் தந்தையான முன்னாள் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்கின் சகோதரி ஆவார்.

கிம் கியாங்கின் கணவர் ஜாங் சாங்குக்கு கடந்த 2013 இல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஏனெனில் அரசைக் கவிழ்க்க முயன்ற குற்றச்சாட்டில் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

ஜாங் சாங் முன்னர் கிம் ஜாங்கின் வழிகாட்டியாக கருதப்பட்டார். ஆனால் தேசத் துரோக குற்றச்சாட்டில் சிக்கிய அவருக்கு அதிலிருந்து வீழ்ச்சி தொடங்கியது. இதன் பின்னரே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (4)

# அகதிகள் முகாமில் பயங்கரவாத தாக்குதல்

## 60 பேர் உயிரிழப்பு



(கொங்கோ)

கொங்கோ நாட்டின் இடூரி மாகாணத்தில், அகதிகள் தங்கியிருந்த முகாமை குறிவைத்து நேற்று பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சவோ முகாமில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் குறைந்தது 60 பேர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் உள்ளூரை சேர்ந்த மனித நேய குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கோட்கோ என்ற பயங்கரவாத அமைப்பினர் இந்த தாக்குதலை நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.

கிழக்கு கொங்கோவில் நிலம் மற்றும் வளங்கள் தொடர்பாக நீண்டகாலமாக பதற்றம் நிலவி வரும் நிலையில், அங்கு தீவிரமாக செயற்படும் போராளி அமைப்புகளில் கோட்கோவும் ஒன்றாகும்.

இந்த போராளிகள், இடூரியில் நூற்றுக்கணக்கான பொது மக்களைக் கொன்றுள்ளனர். மற்றும் ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வேறு பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளதாக ஐ.நா.சபை தெரிவித்துள்ளது. (4)

# 20 பேரை பலியெடுத்த போதை!

(புவனஸ்)

ஆர்ஜென்டீனாவில் கலப்பு கொக்கேயின் பயன்படுத்தியதன் காரணமாக ஒரே நாளில் 20 பேர்கள் பலியானதுடன் 74 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த போதைப் பொருள் விநியோகம் செய்தவர்களை தற்போது பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேலும், அண்மையில் வாங்கப்பட்ட போதைப் பொருள் மக்கள் தங்கள் கைவசம் வைத்திருந்தால், கண்டிப்பாக பயன்படுத்த முயற்சிக்க வேண்டாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இதுவரையான தேடுதல் நடவடிக்கையின் மூலம் 10 பேர் கைதாகியுள்ளதாகவும் அவர்களிடம் இருந்து 200 பொட்டலம் கஞ்சா மற்றும் 400 பொட்டலம் கொக்கேயின் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதில் 26 பேர்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (4)

# மின்சாரம் தாக்கி 26 பேர் பலி

(கின்ஷாசா)

கொங்கோவில் உள்ள சந்தையொன்றில் உயர் அழுத்த மின் கேபிள் அறுந்து வீழ்ந்ததில் மின்சாரம் தாக்கி 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் கின்ஷாசா அருகே நேற்று முன்தினம் புதன்கிழமையன்று இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

கின்ஷாசாவின் புறநகரில் உள்ள மடாடி-கிபாலா மாவட்டத்தில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஏராளமானவர்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் கொங்கோ பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (4)

# ஐரோப்பாவிற்கு கூடுதலான படைகளை அனுப்பும் அமெரிக்கா-ரஷ்யா கண்டனம்

( மொஸ்கோ)

உக்ரேய்ன் மீதான ரஷ்ய படையெடுப்பு குறித்த அச்சத்தின் மத்தியில் நேட்டோ நட்பு நாடுகளுக்கு ஆதரவாக ஐரோப்பாவிற்கு கூடுதல் படைகளை அனுப்பும் அமெரிக்க முடிவை ரஷ்யா கண்டித்துள்ளது.

உக்ரேய்ன் எல்லைக்கு அருகே ரஷ்யா அதன் படைகளை குவித்துள்ளதால் இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் நிலவி வருகிறது.



உக்ரேய்ன் மீது படையெடுத்தால் ரஷ்யா கடும் விளைவுகளை சந்திக்கும் என மேற்கத்திய நாடுகள் எச்சரித்துள்ளன.

அதுமட்டுமின்றி, பிரித்தானியா, அமெரிக்கா, போலாந்து உக்ரேய்னுக்கு ஆயுதங்கள் வழங்கியுள்ளன.

அமெரிக்காவின் இம்முடிவு பதற்றத்தை மேலும் அதிகமாக்கியுள்ளது மற்றும் அரசியல் தீர்வுக்கான வாய்ப்பைக் குறைத்துள்ளது என ரஷ்யா தெரிவித்துள்ளது. (4)

# பக்தாத் விமான நிலையத்தில் மீண்டும் ரொக்கெட் தாக்குதல்

(பக்தாத்)

பக்தாத் சர்வதேச விமான நிலையத்தின் மீது நேற்று முன்தினம் இரண்டாவது முறையாக ரொக்கெட் தாக்குதல் நடந்துள்ளதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் பக்தாத் சர்வதேச விமான நிலையத்தின் மீது குறைந்தது 6 ரொக்கெட்டுகள் குண்டுகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டன.

இதில், விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈராக் ஏர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான இரண்டு விமானங்கள் சேதமடைந்தன.

சேதமடைந்த விமானம் இந்நிலையில், இரண்டாவது முறையாகவும் ரொக்கெட் தாக்குதல் நடந்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் போக்குவரத்து குறித்து வரும் வாரம் ஆராயப்படும்

## முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மாணவர்களை வீடு திரும்புவதற்கான பேருந்து சேவை இடம்பெறாததன் காரணமாக மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர்.



காலையில் நட்டாங்கண்டலில் இருந்து பாடசாலைகளுக்கான மாணவர்களை ஏற்றிச் செல்லும் தனியார் பேருந்து சேவை மாணவர்களை வீடு திரும்பும் வகையில் ஈடுபடுவதில்லை. இதனால் மாணவர்களைப் பெற்றோர்களே வீட்டிற்கு அழைத்து வருகின்ற நெருக்கடி நிலைமை காணப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் துணுக்காயில் இருந்து மாந்தை கிழக்கு மாணவர்களை ஏற்றுவதற்கான தனியார் பேருந்து சேவை நடத்துவது என இணக்கப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை அப் பேருந்து சேவைகள் நடைபெறவில்லை.

இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரனிடம் கேட்ட போது டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர்களை ஏற்றுவதற்கான இணக்கப்பாடு தனியார் பேருந்து சங்கத்திடம் இருந்து கிடைக்கப் பெற்றிருந்தது. ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பாக வரும் வாரத்தில் மாவட்ட செயலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்து சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டம் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் இப்பிரச்சினை ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (5-6-350)



பூநகரி பிரதேச சபையினால் தூய்மையாக்கும் வேலைத் திட்டம் நேற்று புதன்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.
(படம் :- கிருஷ்ணகுமார்)

## ஆற்றுப்படுக்கைகளில்

# சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மருதன் குளம், புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவதுடன் வீதிகளும் சேதமடைந்து வருவதாகவும் இதனைத் தடுத்து நிறுத்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பிரதேசங்களில் மணல் அகழ்வுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படாத நிலையில் இப்பிரதேசங்களில் உள்ள ஆற்றுப்படுக்கைகள் குளங்கள் என்பவற்றில் பெருந்தொகையான மணல் சட்டவிரோதமான முறையில் வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து குறித்த பிரதேசங்களில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-315)

# உள்ளூராட்சி அமைச்சின் நடமாடும் சேவை

(வவுனியா)

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் நடமாடும் சேவை எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் நெடுங்கேணி பிரதேச சபையில் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் உள்ளூராட்சித் திணைக்களம், வீட்டுத்திட்டம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி திணைக்களம், காணி நிர்வாகம், கிராம அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தொடர்பான சேவைகள் இடம்பெறவுள்ளன.

எனவே பொதுமக்கள் இந்த நடமாடும் சேவையில் இணைந்து பயன் பெறுமாறு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (5)


சிவமயம்



இணுவில் திருவருள்மிகு

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய

புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

திருமுழுக்குத் திருமுகம் – 06.02.2022

04.02.2022 வெள்ளிக்கிழமை காலை 8 மணி திரயட்சர கணபதி ஆராதனை, விசேஷசந்தி, யாகபூஜை, பாவனாபிஷேகம், ஸ்தாலீபாகம், ஹோமம், தீபராதனை
மாலை 4 மணிக்கு குமாரகணபதி ஆராதனை, பூத சுத்தி, யாகபூஜை, ரோமம், தீபராதனை

05.02.2022 சனிக்கிழமை காலை 8 மணி ஹேரம்ப கணபதி ஆராதனை, விசேஷசந்தி, பிம்பசுத்திகும்பபூஜை, யாகபூஜை, விசேஷ திரவிய ஹோமம், தீபராதனை
மாலை 3 மணிக்கு சங்கடஹர கணபதி ஆராதனை, பிம்பசுத்தி, பிம்ப ரக்ஷாபந்தனம், நியாசம், யாகபூஜை, ஹோமம், யாகதீபாராதனை

எண்ணெய்க்காப்பு | 03.02.2022 வியாழன் பகல் 12.00 மணிமுதல் 04.02.2022 வெள்ளி இரவு 10.00 மணி வரை

06.02.2022 காலை 8 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சிணம் 8.47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம்

இங்ஙனம்
விநாயகர் அடியார்கள்.

(C5703)


# தமிழர்களுக்கு சுதந்திரம் வழங்க சிங்கள மக்கள் முன்வர வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்




(நெளுக்குளம்)

தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்கள மக்கள் முன்வர வேண்டும் என்று வவுனியாவில் கடந்த 1812 ஆவது நாளாக தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், பயங்கரவாத சட்டத்தை நீக்குவதற்கு ஜி.எஸ்.பி பிளஸைப் பயன்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தி ஒரு கடிதம் அனுப்பியுள்ளோம். எமது பிள்ளைகள் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தற்போதைய பயங்கரவாத சட்டமே பிரதான காரணமாகும்.

இதேவேளை சிங்கள மக்களின் சுதந்திர தினத்தை நாம் எதிர்க்க விரும்பவில்லை. தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்கள மக்கள் முன்வர வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒடுக்கு முறையில் இருந்து சுதந்திரத்தை அனுபவிக்கும் விடயத்தை அவர்கள் தமிழர்களுக்கும் வழங்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளும் தமது உறவுகளுடன் மகிழ்வுடன் வாழ்வதை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும் என்றனர். (5-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து முறைகேடுகள் தொடர்பில் அறிவிக்க புதிய இலக்கம்

(கொழும்பு)


**போக்குவரத்து விதிமீறல்கள் உள்ளிட்ட சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் மாகாண பேருந்து ஊழியர்களுக்கு எதிராக வீடியோக்களை பதிவு செய்து அனுப்புவதற்கான 071-259 5555 எனும் புதிய இலக்கம் ஒன்றை போக்குவரத்து ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.**

சமூக வலைத்தளங்களான வட்ஸ் அப், வைபர் மற்றும் இமோ மூலம் அந்த எண்ணுக்கு போக்குவரத்து விதிமீறல்கள் உள்ளிட்ட சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் மாகாண பேருந்து ஊழியர்களுக்கு எதிராக காட்சிகளை பதிவு செய்து அனுப்புவதன் மூலம் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளரும் பேராசிரியரு-மான திலான் மிராண்டா தெரிவித்தார். (4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## பகை, பிணி போக்கும் கருட பஞ்சமி



உலகில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் காக்கும் கடவுளாகிய மகா விஷ்ணுவின் வாகனமாகவும், கொடியாகவும் இருக்கும் சிறப்பினை பெற்றவர் கருட பகவான். பெருமாள் கோவில்களில் இவர் பெரிய திருவடி என்று அழைக்கப்படுகிறார். விஷ்ணு தலங்கள் அனைத்திலும் கருவறைக்கு எதிராக தனிச்சந்நிதியில் வீற்றிருப்பார். கோவில் மதில்களில் நான்கு புறத்திலும், இவர் சிறகினை விரித்து பறக்க தயார் நிலையில் இருப்பதை காணலாம்.

கருடனை தன் வாகனமாக பெருமாள் ஏற்ற போது, வெற்றிக்கு அறிகுறியாக நீ என் கொடியிலும் இருப்பாய் என்று வரமளித்தார். பெருமாள் கோவில் பிரமோற்சவத்தின் போதும், கருட சேவையின் போதும், பல்வேறு விழாக்களின் போதும் பெருமாள், கருடன் மீது அமர்ந்து வீதி உலா வந்து அருள்பாலிப்பார்.

பெருமாள், கருடாழ்வார் மீது அமர்ந்து வீதி உலா வருவதில் ஒரு சூட்சுமம் அடங்கியுள்ளது. கோவிலுக்கு வர இயலாத பக்தர்களுக்கு, அவர்கள் இல்லம் நாடி அருள்புரிய இறைவன் வருகிறான் என்பது தான் அந்த சூட்சுமம்.

கருட தரிசனம் சுப தரிசனமாகும். கருடன் மங்கள வடிவானவன். வானத்தில் கருடன் வட்டமிடுவதும், கத்துவதும் நல்ல அறிகுறியாகக் கருதப்படுகிறது. கோவில்களில் கும்பாபிஷேகம், யாகம், சிறப்பு வழிபாடுகள் நடக்கும் போது கோவிலுக்கு நேர் மேலே கருடன் வட்டமிடுவதை இன்றும் காணலாம்.

ஸ்ரீகருடாழ்வார் ஆவணி மாதம் வளர்பிறை பஞ்சமி சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தார். பெருமாள் கோவில்களில் மூலவருக்கு முன்பாக நேராக எழுந்தருளி இருக்கும் இவரையே பக்தர்கள் முதலில் வணங்க வேண்டும். பக்தர்களுக்கு சிறிய துன்பம் ஏற்பட்டாலும் துயர் துடைத்து இன்பம் அருளி உரிய நேரத்தில் காப்பவர் இவர். கருட தரிசனம் பகை பிணி போக்கும். நிறைந்த செல்வத்தை நல்கும்.

### தாயின் அடிமை விலங்கை உடைத்த கருடன்

காசியபமுனிவரின் மனைவிகள் கத்ரு, வினதை. இவர்களில் கத்ரு நாகர்களுக்கு தாயாக விளங்கினாள். வினதை அருணனையும் பெற்றாள். ஒரு முறை கத்ரு, வினதையை அடிமைப்படுத்தும் எண்ணத்துடன் வம்புக்கு இழுத்து இந்திரனின் குதிரை (உச்சைஸ்வரஸ்) என்ன நிறம்? எனக் கேட்டாள். அதற்கு வினதை இதில் என்ன சந்தேகம்? வெள்ளை நிறம் என்றாள்.

இல்லை கறுப்பு நிறம் என்றாள் கத்ரு. விவாதம் வளர்ந்து போட்டியாக மாறியது. இந்தப் போட்டியில் ஜெயித்தவர் தோற்றவருக்கு அடிமையாக வேண்டும் என்ற நிபந்தனையை வகுத்துக் கொண்டனர்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## உள்ளூர் துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது

(திருமலை)

திருகோணமலை- மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலை அடுத்து குறித்த இளைஞர் வயலில் காவல் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவர் தங்கியிருந்த குடிசையை சோதனையிட்டபோது அவரிடமிருந்து துப்பாக்கி மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் தோப்பூர்- பட்டித்திடல் பகுதியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி பாஸ்கரன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (4)

## மருத்துவ பீட மாணவர்கள் மீது தாக்குதல்

### இராஜாங்க அமைச்சரின் மகன் கைது

(கொழும்பு)

ராகம மருத்துவ பீட மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் ராகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்கொடுவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 23 வயதுடைய அவிந்த ரந்தில ஜெஹான் பெர்னாண்டோ என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது சொகுசு காரும் களுபோவில பகுதியில் வைத்து ராகம பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதன்படி இச் சம்பவம் தொடர்பில் மொத்தம் 07 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏழு பேரும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 330 | 350 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 500 |
| தக்காளி | 120 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 200 | 230 | 250 |
| கரட் | 420 | 450 | 500 |
| பூசணி | 150 | 130 | 240 |
| புடோல் | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 150-180 | 200 |
| பாகற்காய் | 350 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 260 | 180 | 280 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 450 | 450 | 300 |
| லீக்ஸ் | 220 | 230 | 300 |
| பீற்றூட் | 300 | 280 | 350 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1200 |
| போஞ்சி | 200 | 260 | 320 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-90 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 180 | 200 | 280 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா * | 110 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயால் நாளாந்தம் 40 பேர் உயிரிழப்பு

## புற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு

(கொழும்பு)

**நாட்டில் புற்றுநோயால் நாளாந்தம் சுமார் 40 பேர் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அந்தப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் இஷானி பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் 2019 ஆம் ஆண்டில் புற்று நோயால் 31 ஆயிரத்து 848 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உலக புற்றுநோய் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# இறக்குமதி ஆரம்பித்தாலும் விலை குறையாது

## வாகன இறக்குமதியாளர் சங்கம்


(கொழும்பு)

அரசாங்கம் வாகன இறக்குமதி நடவடிக்கையினை ஆரம்பித்தாலும், வாகனங்களின் விலை குறைவடையும் சாத்தியம் இல்லையென இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது வாகன இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக வாகன விநியோகஸ்தர்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் பணவீக்கம் ஆகியன காரணமாக வாகனங்களின் விலை கடுமையாக உயர்வடைந்துள்ளதாகவும் இந்த நிலைமையினை சரி செய்வதற்கு நீண்டகாலம் தேவைப்படுமெனவும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரஜ்சிகேட் தெரிவித்தார். (4)

# சுற்றுலாத் துறையை மேம்படுத்த 6,000 இடங்கள் அடையாளம்



(கொழும்பு)

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் 6 ஆயிரம் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மேலும், அடையாளம் காணப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தரும்போது சுற்றுலாத் தலங்கள் குறித்து அறிந்துகொள்ளும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (4)

# சுற்றாடல் அமைச்சருக்கும் கொவிட்

(கொழும்பு)

சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டவர்களில் 27 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)



# பூஸ்டர் தடுப்பூசி பெறுவோர் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

பூஸ்டர் தடுப்பூசி தொடர்பான தவறான கருத்துக்கள் நீக்கப்பட்டு வருவதால், கடந்த சில நாட்களாக பூஸ்டர் டோஸ் பெறும் நபர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் கொரோனா தலைமை ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

பூஸ்டர் டோஸ் பற்றிய கட்டுக்கதைகள் குறித்து ஊடகங்களில் நடைபெற்ற பொது விவாதத்திற்குப் பிறகு, குறிப்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பூஸ்டர் டோஸ் பெறும் நபர்களின் எண்ணிக்கையில் வியத்தகு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்கள் இறுதியாக பூஸ்டர் டோஸ் தொடர்பான தவறான எண்ணங்களை கைவிட்டு, படிப்படியாக பூஸ்டர் டோஸ் பெறத் தொடங்கியுள்ளனர் என்பது உறுதியளிக்கிறது என தெரிவித்த அவர், மொத்த மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 40% பேர் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என கூறியுள்ளார். (4)

# இன்று ஒரு தகவல்

## வேறுபட்ட மனங்களின் விநோதப் போக்குகள்

நெருங்கிய இரத்த உறவுகளிடையே கருத்து வேறுபாடு எழுவது சகஜம்.

பாச உணர்வுகள் சுண்டப்படும் நேரத்தில், வளர்த்துக் கொண்டுவிட்ட மேலோட்டமான பகைமை உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தந்து, அவற்றிற்குப் பலிபீடம் அமைக்கப் பலராலும் எப்படி முடிகிறது? வியப்பான ஒன்றுதான்! வேறுபட்ட மனங்கள், பழிவாங்கும் எண்ணம், நான் தான் திறமையானவன் என்று வல்லமை கூறும், அவச்சொல் பேசும், ஒடுக்கிவிடத் துடிக்கும், திசைக்கொன்றாய் இழுக்கும், இறுதியில் அறுத்துக் கொண்டு விடும்.

இரத்த உறவுகளிடம் உள்ள குறைவினால் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமலும் முக்கியத்துவம் அளிக்காமலும் இருப்பதே இத்தகைய பிரச்சினைகளைச் சமாளிக்கும் வழியாகும். வேறுபட்ட இரு மனங்களுக்கிடையே ஏற்பட்டுவிட்ட போட்டி ஆரோக்கியமற்ற ஒன்றாகும்.

குடும்பத்திற்கும் குலத்திற்கும் வைக்கும் அதிர்வேட்டுப் போன்ற இப்போட்டி, சுற்றியிருப்போர் கைகொட்டிச் சிரிக்க ஏதுவாகும்.

போட்டி போன்ற சூழ்நிலை உருவாகியதுமே, பின்வாங்கத் தொடங்குவதே முறையான செயலாகும்.

இதில் வெற்றி வெற்றுவிட்டதாக எண்ணும் மனத்தின் வெற்றி, உண்மையான வெற்றியே ஆகாது. தோல்வியை வலியச் சென்று வரவழைப்பதா? என்று எண்ணும் மனத்தின் செயல் தோல்வியே ஆகாது என்பதை உணர வேண்டும்.

இதன் உண் மையான பலன் உடனே தெரியாது. நாட்பட விளங் கும். கேள்விப்படும் நான்கு பேர் தீர்ப்பும் அதுவா கவே இருக்கும்.

மனத்தின் தற்காலிகமான உணர்வுகளுக்குச் செயல்வடிவம் தருபவர்கள் அதை எண்ணி நிரந்தரமாக வருந்த வேண்டி வரும். பொறியில் ஒருகால் சிக்கிக் கொண்டுவிட்டது என்றால், அதை இதமாக எடுக்க முயல வேண்டுமே தவிர, இரண்டாவது காலையும் அதனுள் விடுவது புத்திசாலித்தனமாகாது. அதைப் போன்ற செயலே இத்தகைய நடவடிக்கைகளில் மேலும் முழு வேகம் கொண்டு இறங்குவது.

சேற்றை மற்றவர் உடம்பில் பூச விரும்புகிறவர்கள், அதை நம் கையிலல்லவா எடுக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மற்றவர்கள் உணர்ச்சிவசப்படும் பொழுது அவர்களை ஒரு மன நோயாளி போலவும், பச்சிளங் குழந்தையாகவும் எண்ண வேண்டும். கட்டுப்பாடற்ற சக்தி இவர்களை ஆட்டிப்படைக்கிறதே என்று எண்ணிப் பரிதாபம் கொள்ளவேண்டும்.

அத்தகைய கட்டுப்பாடற்ற சக்தி நம்மையும், பாதித்து விடாதபடி நிதானத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

அவர்கள் அமைதியாய் – சகஜ மனநிலையுடன் இருக்கும் போதும், உங்களுக்கும் அத்தகைய மனநிலை இருக்கும்போதும் கலந்து பேசலாம்.

பேசிப் புண்ணியமில்லை என்று தோன்றினால் மாற்றுச் செயலில் இறங்காதீர்கள். மாறாக, விலகி ஒதுங்குங்கள்.

உறவானது சிறப்பாக இல்லாவிட்டாலும் சாதாரணமாக இல்லாவிட்டாலும் மோசமாகிவிடாமல் இருந்தால் அதுவே போதுமானது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## வழிப்போக்கர்களும் ஒரு பானை கூழும்

(நேற்றைய தொடர்ச்சி)

மீண்டும் மீண்டும் என கொஞ்சம் கொஞ்ச மாகக் குடித்து பானையை காலி செய்துவிட்டான். அப்போது தான் அவனுக்கு பயம் வந்து விட்டது. பசியில் கூழ் முழுவதையும் குடித்து விட்டதை உணர்ந் தான்.

கிழவிக்குத் தெரியாமல் இருக்க கற்களை பானையில் போட்டு மூடிவைத்துவிடலாம் என்று நினைத்து, அப்படியே செய்துவிட்டு போய் படுத்துக் கொண்டான்.

காலையில் மூன்று சகோதரர்களும் கிழவியின் அன்பான உபசரிப்புக்கு நன்றி சொல்லி விட்டு விடைபெற்றுச் சென்றனர்.

அவர்கள் சிறிது தூரம் போனதும் பானையைத் திறந்த கிழவி அதில் கற்கள் நிரம்பியிருப்பதைப் பார்த்தாள். காட்டிலேயே வசிக்கும் கிழவி வேகமாக ஓடக்கூடியவள். விடைபெற்றுச் சென்ற மூன்று சகோதரர்களையும் பின் தொடர்ந்து வேகமாகச் சென்று வழிமறித் தாள்.

பானையில் இருந்த கூழைக் குடித்துவிட்டு கற்களை நிரம்பியதற்காக மூன்று பேரையும் பழித்தாள். மூத்தவன் அந்தக் குற்றத்தை நாங்கள் செய்யவே இல்லை என்று உறுதியாக மறுத்துப் பேசினான். "அப்படியானால், உங்களுக்கு ஒரு சோதனை வைக்கிறேன்" என்றாள் கிழவி.



மூன்று பேரையும் அருகில் இருந்த ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றாள். ஆற்றின் குறுக்கே அக்கரைக்குச் செல்வதற்கு ஒரு மரப் பாலம் போலக் கிடத்தப்பட்டிருந்தது. "இந்த மரத்தில் நடந்து அக்கரைக்குச் செல்ல வேண்டும். நான் சொல்லும் பாடலைப் பாடிக் கொண்டே செல்ல வேண்டும்" என்றாள் கிழவி..

"நான்தான் கிழவியின் கூழைக் குடித்தேன் என்றால் இந்த ஆறு என்னை கடலில் சேர்க்கட்டும் இந்த ஆறு என்னைக் கடலில் தள்ளட்டும்"

என்பதை கிழவி அவர்களுக்கு பாடிக் காட்டினாள். கிழவி கூறியபடியே மூத்த இரண்டு சகோதரர்களும் மரத்தின் மீது நடந்து அக்கரையை எட்டிவிட்டார்கள்.

மூன்றாவதாக இளையவன் பயந்து கொண்டே மரப்பாலத்தை நெருங்கினான்.

பாட்டி சொன்ன பாடலைப் பாடிக் கொண்டு மரத்தின் மீது நடந்தான். திடீரென தவறி தண்ணீரில் விழுந்து விட்டான்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## பால காண்டம்




ஆடவர் தம் மறச் செயலால் வீரம் செறிந்தது புகழ்மிக்க நாடு எனத் திகழ்ந்தது. கொடைச் சிறப்பால் வீரம் செறிந்தது; புகழ் மிக்க நாடு எனத் திகழ்ந்தது.

கொடைச் சிறப்பால் வறுமை நீங்கியது: வள்ளல்கள் என்று ஒரு சிலர் புகழ் பெற முடியாமல் அனைவரும் பிறர் துன்பத்தைக் களைந்தனர்.

பிறர் கை ஏந்தாமல் பீடும் பெருமையும் பெற்று மக்கள் வாழ்க்கை நடத்தினர். செல்வம் தனி உடைமை என்று கூற முடியாமல் அனைவருக்கும் உரியதாய் இருந்தது.

கல்வியும் மக்கள் உடைமையாக இருந்தது. கற்றவர், கல்லாதவர் என்ற பேதம் இன்றி அனைவரும் கல்வி கற்று அறிவிற் சிறந்தவராய்த் திகழ்ந்தனர்.

### மகவு வேள்வி

புறச் செல்வத்திலோ, அற வாழ்க்கையிலோ குறை காணாத மன்னர், தன் அக வாழ்வில் நிறைவு காணாதவனாய் வாழ்ந்தான். மக்கட்செல்வம் அவனிடம் வந்து அவனை மகிழ்ச் செய்யவில்லை. யாழும் குழலும் அவனுக்குத் திகட்டி விட்டன. அமுதமொழி பேசும் குழந்தைகளின் மழலை மொழி கேட்டு மகிழ விரும்பினான். கோடி இருந்தும் என்ன பயன்? நாடித் தன் மடியில் தவழும் நன்மக்களை அவன் பெறவில்லையே.

"ஒருத்திக்கு மூவர், அவனுக்கு மனைவியர்; எனினும் கருத்தரித்துக் காதல் நன்மகனைப் பெற்றுத் தரவில்லை" என்ற குறை அவனை அரித்தது. சூரிய குலம் அவனோடு அத்தமித்து விடுமோ? என்ற அச்சம் உண்டாகியது. அவனுக்குப் பின் யார் அந்த நாட்டை ஆள்வது? வாரிசு இல்லாமல் வறுமை உற்றுக் கிடந்தது அவன் வாழ்வு. இன்பம் சேர்ப்பதற்கு ஏந்திழையர் பலர் இருந்தனர்; துன்பம் துடைப்பதற்கு ஒரு மகவு இல்லையே என்ற ஏக்கம் அவனைத் தாக்கியது.

வைத்தியனைக் கேட்டான்; வழிவகை அவனால் கூற இயலவில்லை. ஆசிரியனை அணுகினான். வசிட்டர் அவன் குலகுரு; அரசியல் ஆசான்; வாழ்க்கை வழிகாட்டி; சாத்திரம் அறிந்தவர். அவரை அடைந்து தன் குறையை வெளியிட்டான்.

"பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் மாந்தர் தம் முயற்சியால் பெருகுவன; அவை ஈட்டத் தக்கன; மக்கட் செல்வம் பெறத் தெய்வ அருள் தேவைப்படுகிறது.

அதற்கு மறை கற்ற மாமறையோன் நீர் தாம் வழிகாட்ட வேண் டும்" என்றான்.

மழை இல்லாவிட்டால் மறையவர் வேள்விகள் இயற்றுகின்றனர்; மற்றையோர் இசை பொழிவித்து இறைவனை வேண்டுதலும் உண்டு. இந்த மரபுகளை ஒட்டி மகவு இல்லை என்றால் யாகம் எழுப்பித்தல் அக்கால மரபாகக் கொண்டிருந்தனர். அதற்குப் புத்திர காமேட்டி யாகம் என்று பெயரிட்டனர்.

"மகவினை நல்கும் மகிமை இந்த புத்திர காமேட்டி யாகத்துக்கு உள்ளது என்றும் தக்கவரைத் தலைமையாகக் கொண்டு இதை நடத்துக" என்றும் வசிட்டர் அறிவுரை தந்தார். தெய்வ அருளால் பிறக்கும் மகன் ஆற்றல் மிக்கவனாய் விளங்குவான் என்ற நம்பிக்கையும் சேர்ந்து கொண்டது.

அக்கால வழக்கப்படி இம்மகவு வேள்வி இயற்றுதற்கு முன் மற்றோர் வேள்வி இயற்ற வேண்டும் என்ற மரபு இருந்தது. இதற்கு அசுவமேதயாகம் என்று பெயரிட்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுப்போக நேர்ந்தால் கவலைப்படாதீர்கள். காரணங்களை ஆராய்ந்து பாருங்கள். குறைகள் தெரியும். மீண்டும் முயற்சி செய்யுங்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள இனத்திற்கான சுதந்திர தினம் இன்று

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம் இன்றாகும். இலங்கையின் சுதந்திர தினம் என்று கூறும்போது, தமிழ் மக்கள் நம்மை ஒரு மாதிரியாகப் பார்க்கவே செய்வர்.

ஆம், இலங்கையின் சுதந்திர தினம் என்றால் அது இந்த நாட்டின் அனைத்து மக்களுக்குமுரியதா? அனைத்து மக்களும் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனரா? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

இந்தக் கேள்விகளுக்கான பதில் ஆம் என்பதாக ஒருபோதும் இருக்க முடியாது.

உண்மை, இலங்கையின் சுதந்திர தினம் என்பது சிங்களப் பெரும்பான்மை இனத்திற்குரியதான சுதந்திரமேயன்றி சிறுபான்மை இனத்தவர்களுக்குரியதல்ல என்பது மறுக்க முடியாத உண்மை.

அதாவது 74ஆவது சுதந்திர தினம் எனும் போது, இலங்கையில் சிறுபான்மை இன மக்கள் கடந்த 74 ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு ஆட்சியாளர்களால் அவ்வப்போது வஞ்சிக்கப்படுகின்ற மக்களாக வாழுகின்றனர் என்ற உண்மை அதற்கு உறைந்திருக்கின்றது.

ஆம், இலங்கையை குடியேற்ற நாடாக வைத்திருந்த ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கிய பின்பு, இலங்கையைக் கைவிடுகின்ற முடிவை எடுக்கின்றனர்.

அப்போது எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் இலங்கைக்குக் கிடைக்கின்ற சுதந்திரம் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்குமானதென நம்பினர்.

அதாவது சிங்களவர்களுடன் சேர்ந்து வாழலாம் என்று அவர்கள் நம்பினர் – நினைத்தனர்.

ஆனால் சிங்கள அரசியல்தலைவர்கள் தமிழ் அரசியல் தலைவர்களை ஏமாற்றி இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரத்தை தங்களுக்குரியதாக ஆக்கினர்.

சுருங்கக்கூறின் டி.எஸ்.சேனநாயக்க போன்ற சிங்களத் தலைவர்களிடம் எங்கள் தமிழ்த் தலைவர்கள் ஏமாந்து போயினர்.

இதை ஏமாந்து போயினரா? அல்லது சிங்கள அரசியல் தரப்புகளின் கௌரவிப்புகளுக்குள் மயங்கிய தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழினத்தின் எதிர்காலத்தை மறந்துபோயினரா? என்பதுதான் புரியவில்லை.

எதுஎவ்வாறாயினும் அன்று டி.எஸ். சேனநாயக்கவிடம் ஏமாந்துபோன சேர்.பொன். இராமநாதன் போன்ற தமிழ் அரசியல் தலைவர்கள் இன்று ஏமாந்ததுபோல நடிக்கின்றனர்.

கொழும்பு வாழ்க்கையும் பதவி ஆசையும் விடுதலைப் போராட்டத்தின் மீதான கோபமும் சேர்ந்து, எங்கள் தமிழினத்தை பல சந்தர்ப்பங்களில் கீழே தள்ளி விழுத்தியவர்கள் எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள்.

இவர்கள் சிங்களப் பேரினவாதத்துடன் நெருக்கமான உறவைப் பேணிக்கொண்டு தங்கள் சொத்தையும் சுகவாழ்வையும் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

ஓ! அன்று சிங்களத் தலைவர்களை நம்பி எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் ஏமாந்தனர்.

ஆனால் இன்று தமிழ் அரசியல் தலைவர்களை நம்பி தமிழ் மக்கள் ஏமாந்து போகின்றனர் என்பதுதான் நிஜம்.

இந்த நிட்டூரத்தில் சிங்கள இனத்தின் சுதந்திர தினம் 74ஆவது ஆண்டை தொட்டு நிற்கிறது அவ்வளவுதான்.

# பயங்கரவாத சட்டத்தை முழுமையாக நீக்கக்கோரி கையெழுத்து பிரசாரம்

## முல்லையில் ஆரம்பித்தார் சுமந்திரன் எம்.பி

(முல்லைத்தீவு)

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தினை முற்றாக நீக்கக் கோரி பொதுமக்கள் கையெழுத்து போராட்டம் ஒன்றினை முல்லைத்தீவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடக பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் தொடக்கி வைத்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் நேற்று ஊடக சந்திப்பு ஒன்றினை நடத்தினார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் இலங்கை தமிழரசு கட்சியின் இளைஞர் அணி தலைவர் கி.சேயோன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டு கையெழுத்து போராட்டத்தினை தொடக்கி வைத்துள்ளார்கள்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தினை நீக்கக்கோரிய கையெழுத்து போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் அவர்கள்,

இலங்கையில் பயங்கரவாத தடுப்பு சட்டம் மிகமோசமான சட்டமாக இருக்கின்றது. 6 மாத காலத்திற்கு தற்காலிக சட்டமாக கொண்டுவரப்பட்டது. 42 ஆண்டுகளாக இருக்கின்றது. விசேடமாக தமிழ் இளைஞர்களை நசுக்குகின்ற ஒடுக்குகின்ற சட்டமாக சர்வதேச விழுமியங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளி செயற்படும் சட்டமாகஇருக்கின்றது.

அது நீக்கப்படும் என்று இலங்கை அரசு தெளிவாக சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி கொடுத்துள்ளது.

அவ்வாறு நீக்குவதற்கான முயற்சியும் சென்ற அரசாங்க காலத்தில் இடம்பெற்றுள்ளது. அது முழுமை பெறவில்லை. ஆனால் தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தினை சீர்திருத்துகின்றோம் என்று சொல்லி எந்தவித உப்புச்சப்பில்லாத ஒரு சீர்திருத்தமாக அறிவிக்கப்படுகின்ற ஒரு வர்த்தமானி பிரசுரம் வந்துள்ளது.

அது நடைமுறையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் அமுலில் எந்த மாற்றத்தினையும் செய்யப் போவதில்லை. ஆகவே சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு விசேடமாக ஐரோப்பிய ஒன்றியத்தினை ஏமாற்றுவதற்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கின்றது. அவர்களையும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் இது செய்யப்படுகின்றது. அவர்கள் எல்லாருக்கும் விளக்கமாக விடயங்களை அறிவித்துள்ளோம் என்றார். (ம-281)

# சுதந்திரதின வைபவத்தில் பங்கேற்கப் போவதில்லை

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சுதந்திரதினத்தை முன்னிட்டு, அனைத்து இலங்கையர்களுக்கும் ஆசி வேண்டி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை திவ்ய ஆராதனைகளை நடத்துவார்.

எவ்வாறாயினும், இம்முறை எவ்வித ஆராதனைகளையும் நடத்துவதில்லை என்றும், சுதந்திரதின கொண்டாட்டங்களில் தான் பங்கேற்கப் போவதில்லை என்றும் அவர் தீர்மானித்துள்ளார்.

பேராயரின் இந்த தீர்மானத்தை அருட்தந்தை சிறில் காமினி நேற்று பிற்பகல் ஊடகங்களுக்கு அறிவித்தார்.

அண்மையில் பொரளை அனைத்துப் பரிசுத்தவான்களின் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள அப்பாவிகளை விடுவிக்கும் வரை குறித்து கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், உண்மையான குற்றவாளிகளை விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தும் வரையிலும் திவ்ய ஆராதனைகளை நடத்தப்போவதில்லையென அருட்தந்தை சிறில் காமினி சுட்டிக்காட்டினார். (ம)

## மீனவர்களின் போராட்டத்திற்கு சுமந்திரன், சாணக்கியன் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரனும் இரா.சாணக்கியனும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடா நாட்டின் கரையோர பகுதிகள் முற்றாக முடங்கியுள்ளதுடன் யாழ்.மாநகரிலும் ஆதரவு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவை படகுகளின் அத்துமீறல்களுக்கு நிரந்தரமான தீர்வு மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் இடம்பெற்ற மீனவர்கள் உயிரிழப்புக்கு நீதி ஆகியவற்றை கோரி தொடங்கப்பட்ட போராட்டம் 4ஆவது நாளாக நேற்று இடம்பெற்றது.

இந்தநிலையிலேயே பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரனும், இரா.சாணக்கியனும் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர். (ம-18.33)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நெருடலை உணருங்கள்

"குற்ற உணர்வு என்பது அறிவாற்றல் சார்ந்தது அறிவாற்றல் நம் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், நெருடல், உணர்ச்சி நிலையைச் சார்ந்தது உணர்ச்சி நம் கட்டுப்பாட்டில் இல்லை." என்று அவர் கூறினார்.

"அப்படியானால் அறிவாற்றலை விட்டுவிடலாமா?" ஸ்ரீ ஸ்ரீ : உணர்ச்சிகளால் மட்டுமே நீங்கள் செயல்பட முடியாது. உணர்ச்சிகளின் தடுப்புக் கருவியாக (Break) அறிவாற்றல் உள்ளது. நெருடலை உணரவும், என்ன நடந்ததோ அது உங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது என்ற விழிப்பணர்வு சரணாகதிக்கு உங்களை அழைத்துச் செல்லும். சரணாகதி உங்களைக் குற்ற உணர்விலிருந்து விடுவிக்கும்.

நெருடலிருந்து விழிப்புணர்வு. விழிப்புணர்விலிருந்து [illegible] ஆகும். பெங்களூர். இரயில்வே ஸ்டேஷன் செல்லும் வழியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

திருக்கோயில்களில் சிவலிங்கம், தக்ஷிணாமூர்த்தி, நடராசர், சந்திரசேகர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் என்ற பல மூர்த்திகள் இருப்பினும் அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்தி தான்.

நெருப்பு - சிவபெருமான்
நெருப்பில் உள்ள சூடு - அம்பிகை
நெருப்பில் உள்ள செம்மை நிறம் - விநாயகர்
நெருப்பில் உள்ள ஒளி - முருகவேள்

மரங்கள் இலையுதிர் காலத்தில் நியதியாக இலைகளை உதிர்கின்றன. மார்கழி, தை மாதங்களில் பனி துளிர்க்கின்றது. சித்திரை வைகாசியில் வெய்யில் வெதுப்புகின்றது. மரங்களுக்கும் பனிக்கும், வெய்யிலுக்கும் எந்த அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது? இவைகள் எல்லாம் இறைவனுடைய திருவருள் ஆணையினால் நியதியாக நிகழ்கின்றன. (தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

69

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



மக்கள் அறுவடை நல்லவிதமாக முடிந்ததை உணர்த்தும் விதமாக இச்சடங்கினைச் செய்கின்றனர். நெல்லளந்த பின் ஒரிரு நெல்லை மரக்காலில் போடுகின்றனர். வெறும் மரக்காலாக வைக்கக்கூடாது என்ற காரணத்தினால் அவ்வாறு செய்கின்றனர். மரக்கால் குறித்து இதுபோன்ற பல பண்பாடுகள் மக்கள் வழக்கில் இருந்து வருவதைக் காண முடிகிறது.

### வழக்கத்தில் இல்லாத பல முகத்தல் அளவைகள்

கீழேவரும் முகத்தல் அளவைகள் அலகுகளும் மற்றைய தகவல்களும் டாக்டர் கே.பகவதியால் எழுதப்பட்டு 1983 இல் வெளி வந்த "தமிழர் அளவைகள்" என்னும் நூலின் கலைச்சொற்கள் அகராதியில் இருந்து தொகுக்கப் பட்டுள்ளன.

முகத்தல் அளவை அலகுகளாக அகல், அசனம், அருத்தாபத்தி, ஆடம், இடங்கழி, இடா, இடைப்படி, இராமலிங்கம், இலக்கு, இலாச்சம், இளையமரக்கால், உழக்கரை, ஓரடை, ஓரெடை, கடி, கந்துகம், கலரை, காணம், காரோணம், குளகம், கோமலம், சங்கை, சலகை, சாடி, சுவை, சூலம், செம்பு, தலைச்சுமை,சோடு, தனிநெல், திராம், துடவு, தூம், தூம்பு, தொள்ளை, தோண்டி, தோத்தை, நாடுரி, நாவுரி, பக்காச்சேர், பட்டணம் படி, பண்டார நாழி, பணவை, பதபூர்வை, பயிண்டு, பாக்கம், சேர், பாத்திரம், பாராகலம், பாரி, பானை, பிச்சைப்பிடி, பிராத்தம், பிளையாநாழி, புட்டி, புட்டில், பெண்டை மரக்கால், மூடம், வட்டி, வண்டிப்பாரம் போன்றவையும் தரப்பட்டுள்ளன. இவை பாவனையில் இல்லாதவை.

இதைவிட சில சொற்களுக்கு விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன,

அகப்பைக்குறி என்பது அகப்பை அளவாகும், அஞ்சலி என்பது உழக்கு ஆகும், இலாபம் என்பது தானிய அளவையில் முதலெண்ணுக்கு வழங்கும் சொல். இலக்குவன் மரக்கால் என்பது சோழர்கால அளவை, உறை என்பது உப்பு அளவை 60 மரக்காலுக்கு சமம், கச்சம் என்பது மரக்கால், கடம் = 2 குறுணி, கடன் = மரக்கால், கண்டி = 360 படி =4 கலம், கரசை = கரிசை, கருநாழி என்பது பல்லவர் கால அளவை, காரி = 16 படி, கோணி = 2 தூணி, ஙகரம் = 1 தூணி, சிட்டி என்பது அளவைக் கருவி, சிவிடு அல்லது சுவடு என்பது 360 நெல் பிடிக்கும் ஓர் அளவு, திரும் என்பது 60 துளி கொண்ட ஓர் நீரளவு, பிடி என்பது உள்ளங்கைப் பிடியளவு, பிடி நெல்லு அளக்கும் அளவு ஒன்றுக்கு ஒரு பிடி அளவாக அளப்போர் எடுக்கும் உரிமை நெல், மண்டிக்கலம் = 72 படி, முட்டி என்பது கைபிடி அளவு, மூட்டை என்பது 48 படி கொண்ட சாக்கு போன்றவையாகும்.

### நீட்டல் அளவை

இன்றைக்கு நமக்கு விஞ்ஞான பூர்வமான அளவுகள் கிடைத்துள்ளன. இந்த அளவுகள் கண்டுபிடிப்பதற்கு முன் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவிதமான அளவுகள் நடைமுறையில் இருந்தன. உதாரணமாக இன்றைய நமது நீட்டல் அளவு மீற்றர் என்பதாகும். பழந்தமிழரிடையே தச்சு முளம் என்ற அளவு நடைமுறையில் இருந்தது. தச்சாசாரிகள் இந்த அளவையை அதிகமாகப் பயன்படுத்தியதால், தச்சுமுளம் என்று அந்த அளவுக்குப் பெயர் வந்தது.

அளக்க என்று அளவுகோல் தேடி, அந்தக் காலத்து மக்கள் எங்கும் போகவில்லை. உடம்பும், உடம்பின் உறுப்புகளுமே அளவு கோல்களாகப் பயன்பட்டன.

ஒரு கிணற்றில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்று ஒருவர் கேட்டால், கிராமத்து மக்கள், அந்தக் கிணற்றில் கணுக்கால் அளவு தண்ணீர் இருக்கிறது. அல்லது முழங்கால அளவு தண்ணீர் கிடக்கு, அல்லது இடுப்பளவு தண்ணீர் கிடக்கு, அல்லது மார்பளவு தண்ணீர் கிடக்கு, அல்லது கழுத்தளவு தண்ணீர் கிடக்கு, அல்லது ஏராளம் உயரத்திற்குத் தண்ணீர் கிடக்கிறது, அல்லது இரண்டாளம் உயரத்திற்குத் தண்ணீர் கிடக்கிறது என்று கூறுவார்கள்.

இப்படி கிணற்றில் கிடக்கிற தண்ணீரின் அளவை, நீர் நிலைகளில் கிடக்கிற தண்ணீரின் அளவைத் தன் உடம்பை வைத்தே அளந்தார்கள். பண்டைய மக்கள் உயரத்தை அல்லது ஆழத்தை அளக்க, அளவு கோல் தேடி எங்கும் அலையவில்லை. தன் உடம்பை வைத்தே, தனக்கான நீட்டல் அளவைக் கணித்துக் கொண்டனர்.

இதை விடவும் மிக நுட்பமான அளவைகளை ஒரு 'மயிர்கனம்' என்று கூறுவார்கள். அதைவிட சற்று பெரிய அளவை ஒரு நூல் கனம் என்று சொல்வார்கள். நூலுக்கு அடுத்து ஒரு விரல் கடை என்று கூறுவார்கள். இந்த விரல் கடையிலும் சுண்டு விரல், பெருவிரல் என்று இரண்டு விதமான அளவைச் சொல்வார்கள். ஒரு விரல் கடை, இரண்டு விரல் கடை, மூன்று விரல் கடை, பிறகு நான்கு விரல் கடை என்று நீட்டல் அளவைச் சொல்வார்கள். நான்கு விரல் கடைக்குப் பிறகு சாண்தான் பெரியது. நான்கு விரல் கடை என்பது ஒரு சாண் என்ற அளவுக்குச் சமன். சாணுக்கும் பிறகு முழம் தான் பெரிய அளவு. இரண்டு சாண் சேர்ந்தால் ஒரு முழம். இரண்டு கைகளையும் கிடையாக (நெட்டுக்கு) நீட்டினால் ஒரு 'கைப்பாகம்' என்ற அளவாகும். நான்கு முழங்கள் சேர்ந்தால் ஒரு கைப்பாகம் ஆகும். இந்த நுட்பம் இயற்கையாகவே மனித உடலுக்கு வாய்த்துள்ளது. இதைக் கண்டறிந்து பழங்காலத்து மனிதர்கள் தன் அளவிற்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள். உடம்பில் உள்ள விரல்கள், கைகள் போன்றே காலாலும் பழங்காலத்தவர்கள் தங்கள் அளவுகளை அளந்திருக்கிறார்கள்.

ஒரு 'பாதம்' இருபாதம் என்று நீளங்களைத் தன் பாதம் கொண்டே அளந்துள்ளார்கள், பாதங்களுக்குப் பிறகு, 'எட்டு' என்று ஒரு அளவு உள்ளது. நிற்கிற நிலையில் வலது காலை ஊன்றிக் கொண்டு இயல்பாக ஒரு எட்டு எடுத்து இடது காலை வைக்கும் தூரத்தைத்தான் 'ஒரு எட்டு" என்ற அளவாகக் கூறுகின்றார்கள். நாம் காலை எட்டிவை என்று மற்றவர்களுக்கு கூறுவதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இந்த எட்டையே முடிந்தவரை இரு காலையும் அகட்டி வைத்துக் கொண்டால் அதற்கு 'ஒரு கவுடு தூக்கு' என்று பெயர். மூன்று பாதம் ஒரு எட்டாகவும், மூன்று எட்டு ஒரு கவுடுதாகாகவும் இருக்கும். இந்த அளவின் நுட்பத்தையும் உணர்ந்து தான் பழங்காலத்து மக்கள், காலின் மூலமும், கால் பாதத்தின் மூலமும் தங்கள் அளவுகளை அமைத்திருக்கிறார்கள். உடம்பையும் கையையும் சேர்த்து "ஒரு கை எடுப்பு உயரம்" என்றும் ஒரு அளவை சொல்கிறார்கள்.

இந்நீட்டல் அளவை பற்றி முனைவர் கு.பகவதி எழுதிய "தமிழர் அளவைகள்" என்ற நூலிலிருந்தே பின்வரும் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் தன் நூலில் நீட்டலளவை சம்பந்தமாக தமிழ் நாட்டு பழந் தமிழர் வரலாற்று நடைமுறைகள் பற்றியே குறிப்பிடுகிறார். அதுபற்றி நாமும் அறிந்து கொள்வோம்.

பொருட்களின் நீளம், உயரம், அகலம், பருமன் போன்றவற்றை நீட்டல் அளவு கருவிகள் கொண்டு அளத்தல் நீட்டல் அளவை எனப்படும். கோள்களின் தூரம் போன்றவற்றைத் தனது அறிவியல் அறிவு கொண்டு அளக்கும் நிலை காரணமாக இவற்றையும் நீட்டல் அளவைக்குள் உட்படுத்தலாம்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரேயே நீட்டல் அளவையினைத் தமிழர் பயன்படுத்தி வந்துள்ளனர். எனினும் பண்டைய காலத்தில் பிற முகத்தல், நிறுத்தல் அளவைகள் பெற்ற செல்வாக்கை இவ்வளவை பற்றிய எண்ணங்களில் நாம் காண இயலவில்லை.

தொல்காப்பியர் அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப் பெயர் பற்றிய பல கருத்துக்களையும், முதலிரண்டு குறித்த (அளவுப் பெயர், நிறைப்பெயர்) கருவிகளையும் குறிப்பிடுகின்றார். ஆயின் அளந்து திட்டமிட்டமா என்ற நில அளவினை இவர் குறிப்பிடுகின்றாரே தவிர எந்த நீட்டல் அளவு கருவியினைப் பயன்படுத்தினர் என்பது குறித்த எந்த ஒரு எண்ணத்தையும் கூறவில்லை.

சங்க இலக்கியத்தில் அடி என அளந்த தன்மை கொண்டு, காலடியினை அளவுக் கருவியாகக் கொண்டனர் எனத் தெரிகிறது. பல்வகையான மாடங்கள் நகர அமைப்பு இவை பற்றிய செய்திகள், அளவு கருவி குறித்த கருத்துக்களைத் தெளிவுறுத்தவில்லையாயினும் அன்றே அளந்து திட்டமிட்ட தமிழர் நிலையையுணர்த்தும் சான்றுகளாகின்றன. சங்கப்பாக்களுடன், பிற வரலாற்றுச் சான்றுகளும் பண்டைத் தமிழரின் நீட்டல் அளவை பற்றிய எண்ணத்தைத் தருகின்றன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் முனிவர்கள் வாழ்த்த முப்பதுக்கும் மேற்பட்ட குகைத் தளங்கள் தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் எல்லாக் குகைகளிலும் முனிவர்கள் படுத்து உறங்கக் கற்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு முழ அகலமும் நான்கு முழ நீளமும் கொண்டதாக அவை உள்ளன என்ற அறிஞர்களின் கருத்து அளந்து படுக்கைகள் தயாரித்த அன்றைய தமிழர் நிலையைத் தெளிவாக்குகிறது. எனவே அன்றே நீட்டல் அளவைகளைப் பயன்படுத்திய தமிழர் நிலையை நாம் உணர இயலுகிறது. அதாவது ஏதோ ஒரு முறையில் நீட்டல் அளவையினைப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது தெளிவு.

முன்னர் குறிப்பிட்டது போன்று நீட்டல் அளவைகள் மனித உறுப்புகள் கொண்டே அளவிடப்பட்டு இருந்திருக்கின்றன என்பதற்குச் சான்றாவன அன்று முதல் இன்று வரையிலும் காணப்படும் அளவுப் பெயர்களான சாண், முழம், அடி போன்றவற்றைக் கூறலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org Laavanaham.org

## 23 மரணம்...

இதற்கமைய கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15,515 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில்மேலும் 1,181 பேருக்கு கோவிட் - 19 தொற்று உறுதியாகியுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 614, 659ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மாதகலில்...

சேர்ந்த இரு மீனவர்கள் கடலில் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் நேற்று வியாழக்கிழமை மாதகலில் வீதியை முடக்கிக் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்பின் ஏற்பாட்டில் துறைமுக சந்தியில் படகுகள், மீன் வலைகளை வீதியில் வைத்து போராட்டம் இடம்பெற்றது.

மேற்படி போராட்டத்தில் கலந்துகொண்ட மீனவர்கள் "எமது கடல் எமக்கு வேண்டும்", "எமது வளத்தை அழிக்காதே", "தொப்புள்கொடி உறவு என்று சொல்லி எமது இனத்தை அழிக்காதே" உள்ளிட்ட பல சுலோகங்களைத் தாங்கியும் கோஷங்களை எழுப்பியும் எதிர்ப்பில் ஈடுபட்டனர். (ம-18,33,104)

## படகு, வலைகளை...

முடியாது எனத் தெரிவித்து தனது படகு மற்றும் வலைகளை எரித்து அழித்துள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிகண்டி ஆலடிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கடற்றொழிலாளி சுனாமி அனர்த்தத்தின் காரணமாக படகு, வலைகள் முற்றாக இழந்திருந்த நிலையிலும் அவருக்கு எவ்வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தொடர்ந்தும் கடல் தொழில் செய்து வந்த இவர் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணமாக தொடர்ச்சியாக சொத்து அழிவுகளை சந்தித்து வந்துள்ளார்.

இதனால் மனஉளைச்சலுக்கு உள்ளான அவர், இலங்கை அரசாங்கமும் கடற்படையும் இந்திய இழுவைப் படகுகளை ஒருபோதும் தடை செய்யப் போவதில்லை.

எனவே கடலில் இறங்கி தொழில் செய்ய முடியாது. இதனால் படகு, வலைகளை வைத்திருந்து எவ்வித பிரயோசனமும் இல்லை எனத் தெரிவித்து தனது பயன்பாட்டில் உள்ள மீன்பிடிப் படகினையும் வலைகளையும் தீயிட்டு எரித்துள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார். (ம-60,104)

## 197 கைதி...

டாடப்படும் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அரசியலமைப்பின் 34ஆவது சரத்தின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த கைதிகளுக்கு பொதுமன்னிப்பை வழங்கவுள்ளார் என்று சிறைச்சாலை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்படவுள்ள கைதிகளில் மஹர சிறைச்சாலையில் 20 கைதிகளும் கேகாலை சிறைச்சாலையில் 18 கைதிகளும் வெலிக்கடை சிறைச்சாலையில் 17 கைதிகளும் களுத்துறை சிறைச்சாலையில் 13 கைதிகளும் போகம்பரை சிறைச்சாலையில் 11 கைதிகளும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் 11 கைதிகளும் வாரியபொல சிறைச்சாலையில் 10 கைதிகளும் உள்ளடங்குகின்றனர். (ம)

## யாழ்.மாவட்ட...

ழக்கிழமை மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து நான்காவது நாளாகவும் தொடர்ச்சியாக மீனவர்கள் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், இதுவரை உரிய தீர்வு கிடைக்காத நிலையில் மீனவர்கள் நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் ஏ9 வீதி, யாழ்.மாவட்டச் செயலகத்திற்குச் செல்லும் கச்சேரி - நல்லூர் வீதி ஆகிய வீதிகளை முடக்கிப் பல்வேறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அத்துடன் யாழ்.மாவட்டச் செயலகத்துக்குச் செல்லும் பிரதான மூன்று வாயில்களையும் முடக்கி மீனவர்கள் போராட்டத்தை மேற்கொண்டனர். இந்நிலையில் பொலிஸார் ஏ9 வீதி ஊடாகப் பயணிக்கும் வாகனங்களை மாற்றுப் பாதையில் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு கடற்றொழில் அமைச்சர் நேற்று முற்பகல் 11.45 மணிக்கு விஜயம் மேற்கொண்டு கலந்துரையாடிய நிலையில் கடற்றொழில் அமைச்சருடன் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறும் செயற்பாட்டுக்கு எழுத்துமூலமான தீர்வை மீனவர்கள் ஏற்கெனவே கோரியிருந்த நிலையில் அதற்கு அமைச்சர் இணக்கம் வெளியிடாத நிலையிலும் மீனவர்களின் கோரிக்கைகளுக்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளிக்காத நிலையிலும் அமைச்சரை அங்கிருந்து செல்ல விடாது மீனவர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். இதன்பின்னர் அவர் வந்த வாகனத்தை அங்கிருந்து செல்லவிடாது முற்றுகையிட்டும் மீனவர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். நேற்றுக் காலை 7.30 மணிக்கு ஆரம்பமான யாழ்.மாவட்டச் செயலகம், ஏ9 வீதி, நல்லூர் - கச்சேரி வீதிகளை முடக்கும் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் முடிவேதும் எட்டப்படாமல் நிறைவடைந்தது.

எனினும், தமது போராட்டம் உரிய உறுதியான தீர்வு கிடைக்கும்வரை வேறு வேறு வடிவங்களில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனப் போராட்டத்தில் கலந்து கொண்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிடில் இலங்கையின் சுதந்திர தினமான இன்று வெள்ளிக்கிழமை தேசியக்கொடியை ஏற்றவிடாமல் போராட்டம் கடுமையாக இருக்கும் எனவும் யாழ். மாவட்ட மீனவர்கள் எச்சரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-18,33)

## நீதி...

இந்திய மீனவர்களின் இழுவை படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும் இழுவைப் படகு மோதியதில் உயிரிழந்த இரண்டு மீனவர்களுக்கு நீதி கோரியும் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை வீதிமறியல் போராட்டம் ஆரம்பமானது.

வீதிக்கு குறுக்காக பந்தல் அமைத்து இத்தொடர் மறியல் போராட்டம் இடம்பெற்றுவரும் நிலையில் பொது அமைப்புகள், கடற்தொழில் சங்கங்கள், மீனவர்கள் ஆதரவு வழங்கி நான்காம் நாளாக போராட்டம் நடைபெற்றுவரும் நிலையில் நேற்று வியாழக்கிழமை பிற் பகல் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் போது பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்த நிலையில் பருத்தித் துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இப்போராட்டத்தை தடை செய்வதற்கு தடை உத்தரவு விண்ணப்பத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

அதாவது வீதியை மறித்து இருப்பதனால் பொதுமக்களின் இயல்புநிலை பாதிப்படைதல் மற்றும் மாணவர்களின் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படல் மற்றும் கொரோனாத் தொற்று தொடர்பில் கருத்துக்களை முன்வைத்து இதற்கு தடை உத்தரவை பொலிஸார் கோரியிருந்தனர்.

இதனை ஆராய்ந்த நீதிமன்று போராட்டத்திற்கு தடை உத்தரவு வழங்கி கட்டளை பிறப்பித்தது. (ம-18,33,60)

## ஆளுநர் ஜீவன்...

கலந்துரையாடியுள்ளார்.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதமர் இல்லத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பு சிநேகபூர்வமாக அமைந்ததுடன் வடக்கு நிலைமை தொடர்பில் விரிவாக ஆளுநரால் எடுத்து கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-104)


**செவன**
திகதி 03/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 353
P 06 13 42 83

**மெகா பவர்**
திகதி 03/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1015
B 15 23 52 54 78
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 11942

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 0008
மீனம் 06 41 49 51 மீனம்

**மஹஜன சம்பத**
திகதி 2022/02/03
சீட்டிழுப்பு இலக்கம் 4667
X 0 5 2 3 3 2

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2962
S 13 17 63 70

**தன நிதானய**
திகதி - 2022.02.03
சீட்டிழுப்பு இலக்கம் - 697
U 13 17 21 35

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1644 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 03.02.2022 தினம் வியாழன்
K 46 47 49 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 57,637,938/=

**சனிதா**
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.03
சீட்டிழுப்பு இல: 3805
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,035,660/-
வெற்றி இலக்கங்கள் 25 29 37 60 O

**ராசி**
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 03.02.2022
வெற்றி வாரம் 3356
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 24 26 48 52 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,490,600/=

**12**
சீட்டிழுப்பு வாரம் 820
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.02.03 வியாழக்கிழமை
E 28 02 05 15 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 209,846,095/-

**සංවර්ධන වාසනාව**
திகதி : 2022-02-03
வெற்றி வாரம் : 482 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.13,165,036/-
Z 32 47 66 6
ரூ.2,575,900/-
ரூ.13,274,996/-

**அத கோடிபதி**
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1470
சீட்டிழுப்பு திகதி: 2022.02.03
ரூ. 4,138,920/-
வெற்றி இலக்கங்கள் 16 21 37 41 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் அக்கடமி
## ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர். | அரசடி றோட், யாழ்ப்பாணம்.

**தரம் 6 முதல் O/L வரை**

**கல்வியாண்டு - 2022**

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் (9969)

**ஆரம்பம் - 05.02.2022, சனிக்கிழமை**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது.



# புதிய நாவலர்
கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில்.... (C-3705)

**கல்வியாண்டு - 2022**

தரம் 1 முதல் O/L வரை

தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புகள்

ஆரம்பம் : 05.02.2022
சனிக்கிழமை

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

☎-077 459 8440


## வவு.வில் தீப்பற்றி எரிந்த பழக்கடை

வவுனியாவில் திடீரென பழங்கடை ஒன்று நேற்று இரவு தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

வவுனியா, குருமன்காடு சாந்தி கிளினிக் அருகாமையில் உள்ள பழக்கடை ஒன்றை அதன் உரிமையாளர் வியாபாரம் முடிந்து பூட்டிவிட்டு சென்று சிறிது நேரத்தில் குறித்த பழ வியாபார நிலையத்தில் தீ பிடித்து எரிந்துள்ளது. (ம -250)


## மணமகள் தேவை

1977, இந்து கௌரவ குடும்பம். திருவோண நட்சத்திரம், 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10021)

077 728 6050



## தீபம் கல்வி நிலையம்
(இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்)

**கல்வியாண்டு - 2022**

தரம் 6 முதல் O/L மற்றும் A/L வரை
தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புகள்

தரம் 6 ஆரம்பம்:-05.02.2022 (சனி மாலை 4 மணி)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (10010)

தொடர்புகளுக்கு - 077 224 7781
'தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்'



## கணிதம், வர்த்தகம் பாட வகுப்புக்கள்

- தரம் 09, 10, 11 கணிதம் மற்றும் தரம் 10, 11 வர்த்தக பாட தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புக்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.
- Zoom மூலமான வகுப்புக்கள் அதிகாலை 4.00 மணி, 5.00 மணிக்கு நடைபெறும்.
- இம்முறை O/L எழுதும் மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

(10019)

ஆசிரியர் P.சசீகரன் 076 646 3860



## விரைவு பொதிகள் சேவை
# V2 TRAVELS
**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3679)

0768226240 DHL



# மங்களகரமான திறப்பு விழா

தைத் திங்கள் 22 ஆம் நாள் 04.02.2022 இன்று வெள்ளிக்கிழமை
காலை 6.22 மணிமுதல் 7.30 மணிவரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில்

இல. 74, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமையப்பெற்ற

## K. வைத்தியலிங்கம் ரேடர்ஸ்

எனும் ஸ்தாபனத்தினை சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர்
உயர்திரு சி. மோகனசெல்வன் முன்னிலையில்
மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர்
உயர்திரு. K. கோடீஸ்வரன் அவர்களினால் திறந்து வைக்கப்படும் என்பதனை
மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (10017)

இல. 74, பலாலி வீதி, திருநெல்வேலி. | ☎-021 222 2075 | உரிமையாளர் K. வைத்தியலிங்கம் ரேடர்ஸ்



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதியில் இரண்டாவது காணி 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம்
நல்ல சூழல், 1 பரப்பின் விலை
பத்து இலட்சம், ஒன்பது இலட்சம், எட்டு இலட்சம் (10020)

☎- 077 623 4204



## Vacancy For English Language Teachers at Pearson International College

- Must have good level of language proficiency and grammar knowledge.
- Must possess diploma/ HND/B.sc in English or any academic qualification in English medium.
- Teaching experience will be considered as an additional benefit.

Interested candidates are invited to submit their updated resume through email at :
pearsoncollege2020@gmail. com
by 10th February 2022

(10004)

No.21, 3rd Lane, Power house road, Jaffna. Tel: 074 188 7878



# சயன்ஸ் அக்கடமி

நல்லூர், முருகன் ஆலயம் முன்பாக | நாவலர் வீதி, அரியாலை.

**தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்**

## புதிய கல்வியாண்டு - 2022

| தரம் 1 முதல் தரம் 5 வரை | தரம் 6 முதல் O/L வரை |
|---|---|
| வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு | தமிழ்மொழி மூல வகுப்புகள் & English Medium Classes |

இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும் !
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள் !

**ஆரம்பம் - 07.02.2022 திங்கட்கிழமை மாலை 3.00 மணி**

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-3702)

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016



## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில் எமது நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தரமானவர்கள் தேவை!

**விண்ணப்பிக்கக் கூடியவர்கள் :**
- 50 வயதிற்கு மேற்பட்ட MBA, BBA பட்டதாரிகள்.
- Security Service நிறுவனம் ஒன்றை வழிநடத்தக் கூடியவர்கள்.
- அரச, தனியார் வேலைகளில் இருந்து ஓய்வுபெற்ற உயர் அதிகாரிகள்.
- பொருளாதார பேராசிரியர்கள்.

சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.



## வாடகைக்கு வேண்டும்

சுன்னாகம், மல்லாகம், இணுவில், மானிப்பாய், உடுவில் பகுதிகளில் அலுவலகமாக பயன்படுத்த உகந்த வீடுகள் வேண்டும். (9857)

+9477 795 0439
0041 79 334 4733
+9477 544 2370


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.